ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2016) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2016). மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

2016 பிப்ரவரி 20]

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2016)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. க. பாலகிருஷ்ணன், சொல்லுங்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

பிற்பகல் 2-50

***திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குபடுத்தும் சட்டத்தைத் திருத்துவதற்கான இந்தச் சட்டமுன்வடிவில் மீனவர்கள் மீன் பிடிக்கின்றபோது பலவிதமான நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, அவர்கள் பயன்படுத்துகின்ற அந்த மீன் கலனில் நுழைந்து தேடுவதற்கான அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி நுழைந்து தேடுகின்றபோது, அதிலே குறிப்பிட்ட அளவு மீன் இருக்குமானால், அவர்களுக்கு அபராதம் விதிப்பதற்கான தொகை தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. மீனின் மதிப்பு 3 ஆயிரம் ரூபாய் அல்லது அதற்கு குறைவாக இருந்தால் அதற்கான அபராதம் 15,000/- ரூபாய் என்றும், மீன்கள் ஏதும் இல்லாமல் போகும் எந்த நேர்விலும் 15,000/- ரூபாய்க்கு மிகாமலும் தீர்ப்பு அளிக்கிற அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.*

அதேபோல, குறித்துரைக்கப்பட்டுள்ள பரப்பெல்லைக்குள் மீன்பிடிக் கலன் முதல் முறையாக நுழைந்தால் 5,000/- ரூபாய் அபராதம் மற்றும் ஓராண்டுக் காலத்திற்கு மீன் பிடிப்பதற்காக அரசால் அளிக்கப்படும் எல்லாவகையான உதவிகளும் நிறுத்தி வைக்கப்படும். இரண்டாவது முறை, மூன்றாவது முறை, நான்காவது முறையாக அவர்கள் உள்ளே நுழைந்தால், மிகக் கடுமையான தண்டனைகள் அதிலே விதிக்கப்பட்டிருக்கின்றன. மீன்பிடித் தடை மண்டலத்திலே மீன்பிடிக் கலன் முதன்முறையாக நுழைந்திருக்கிறதென்று சொன்னால்,. . .

[@] 20—2—2016 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாலகிருஷ்ணன், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: அதற்கும் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கடைசியாகப் பார்த்தால், மீன்பிடித் தடை மண்டலத்தில் மூன்றாவது முறையாக ஒருவர் மீன் பிடிப்பார் என்று சொன்னால், அந்த மீன்பிடிக் கலனுடைய உரிமமே இரத்து செய்யப்படுகிற இப்படிப்பட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மீனவர்கள் அனுமதி வாங்கிக் கொண்டு போக வேண்டும்; அல்லது மீறிப் போனால், அதற்கு இவ்வளவு கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்படும் என்கிறபோது மீன்பிடித் தொழிலே பாதிக்கிற நிலைமை ஏற்படும். எனவே, இந்தச் சட்டமுன்வடிவை Select Committee-க்கு அனுப்பி, ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு, நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், கொஞ்சம் சுருக்கமாக முடியுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடி ஒழுங்காற்று சட்டத்தின் அடிப்படையில், குறித்துரைக்கப்பட்டுள்ள பரப்பு எல்லைக்குள் மீன்பிடிக் கலன் ஐந்தாவது முறையாக நுழைகிறது என்று வருகிற நேரத்தில் அபராதத்தோடு மட்டுமல்லாமல், படகின் மீன்பிடி உரிமம் இரத்து செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்போல, தடை மண்டலத்தில் மூன்றாவது முறை என்ற அடிப்படையில் மீன்பிடிக் கலனின் உரிமம் இரத்து செய்யப்படுவதோடு, ஆயுள்காலத்திற்கும் அரசினுடைய அனைத்துச் சலுகைகளும் தடை செய்யப்படும் என்று மரண தண்டனைக்கு ஒப்பான, வாழ்வாதாரத்தையே இழக்கக்கூடிய ஒரு மோசமான சட்டம் இயற்றப்படுகிறது. இது இன்றைக்கு இருக்கிற நிலையில், பழி வாங்கக்கூடிய சூழலுக்கு பயன்படக்கூடிய ஒரு சட்டமாக நாம் பார்க்க வேண்டும். குறிப்பாக, கடல் பகுதியில் மீன் பிடிக்கும்போது எல்லைகளைத் தாண்டுவது, தடை செய்யப்பட்ட பகுதிகளைத் தாண்டுவது என்பது ஒரு மிகப்பெரிய சர்ச்சையாக, பிரச்சினையாக இருக்கிறது. அந்தப் பிரச்சினைதான், இலங்கைக்கும், நமக்கும் தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையாக இருக்கிற இந்த நேரத்தில், சில பகுதிகளில் மீன் வளத்தைப் பாதுகாப்பதற்குத் தடை செய்வது என்பது தவிர்க்க முடியாத ஒரு சூழல் என்பதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம்.

ஆனால், எல்லைகளைத் தாண்டுகிற ஒரு சூழல் வருகிற நேரத்தில், அதற்காக நிறைவேற்றப்படக்கூடிய இந்தச் சட்டம் என்பது மரண தண்டனைக்கு ஒப்பாகவும், வாழ்வியலை, வாழ்வாதாரத்தை மிகப் பெரிய அளவிற்குப் பாதிக்கிற ஒரு சூழலை ஏற்படுத்துவதாகவும் அமையும். (மணியடிக்கப்பெற்றது) இதை ஒரு கொடுமையான சட்டமாகப் பார்க்கிறோம். எனவே, இந்தப் பகுதிகளை நிறுத்தி வைத்து, பின்னால் புதிதாக வரக்கூடிய அரசு இதைப் பற்றி ஆய்வுகளை மேற்கொள்கிற விதமாக, இதை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 22 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 22 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2016) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

6. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(எ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பதினான்காவது பேரவை நிறைவேற்றிய அலுவல்களை அறிவிப்பதற்கு முன்னால் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த இந்த பொறுப்பில், நடுநிலை தவறாது பணியாற்றியுள்ளேன் என மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்துள்ள பாராட்டுதலுக்கு எனது நன்றியை மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களிலே சமர்ப்பிக்கிறேன்.*